<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

**M.C.O.P.No.107/2017**

2022 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி Thiru.K.Suresh Kumar, B.A.,B.L., அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | T.விஷ்ணு | வயது. | 24 |
| த.பெ. | தம்புராஜ் | தொழில். | |
| முகவரி. | வெங்கிட்டாபுரம், கோயமுத்தூர் | | |

<u>ம.சா.1, முதல் விசாரணை</u>

நான் இந்த மனுவில் மனுதாரர். எனது முதல் விசாரணைக்கு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1, இறுதி அறிக்கை நகல் ம.சா.ஆ.2, மாதிரி வரைப்படம் நகல் ம.சா.ஆ.3, பார்வை மகஜர் நகல் ம.சா.ஆ.4, விபத்துக்கு காரணமான ஒரு யமஹா FZS மோட்டார் சைக்கிள் அதன் பதிவு எண்.TN 38 BU 0943 ன் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் ம.சா.ஆ.5, விபத்துக்கு காரணமான ஒரு யமஹா FZS மோட்டார் சைக்கிள் அதன் பதிவு எண்.TN 41 AF 5040 ன் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் ம.சா.ஆ.6, டிஸ்சார்ஜ் சம்மரி அசல் ம.சா.ஆ.7(ஆட்சேபனைவுடன் குறியீடு செய்யப்படுகிறது), விபத்து பதிவேடு நகல் ம.சா.ஆ.8, எனது ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.9 (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது), எனது வங்கி கணக்கு புத்தகம் ஜெராக்ஸ் ம.சா.ஆ.10-ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

Sd/- T.விஷ்ணு

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd/-Thiru.K.Suresh Kumar, B.A., B.L.,
Subordinate Judge,
Avinashi.